# இந்தியாவில் முதியவர்களில் காசநோய் (TB) முக்கிய விவரங்கள்

## அறிமுகம்

காசநோய் (டிபி) என்பது இந்தியாவின் சுகாதார சவால்களில் முக்கியமான ஒன்றாகும். பல இணை நோய்கள், அதிக இறப்பு விகிதம், கண்டறியப்படாத காசநோய் போன்ற காரணங்களால் முதியவர்களுக்கு காசநோயின் பாதிப்பு மிகவும் அதிகமாகவே உள்ளது. மேலும் தொற்றாத நோய்களுக்கும் அவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள்.

USAID இன் ஆதரவுடன் REACH நிறுவனம் 2022-23 இல் காசநோய் குறித்த ஆய்வை நடத்தியது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கம் காசநோயாளிகளின் புரிதலை வலுப்படுத்துவதும் அவர்களின் உடல், சமூக மற்றும் உணர்வுப்பூர்வமான தேவைகளுக்கான உத்திகளை அடையாளம் காண்பதும் ஆகும். காசநோய்க்கான தகவல் மற்றும் பராமரிப்பு வழங்குவதில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான முக்கிய பரிந்துரைகளையும் இந்த ஆய்வு வழங்கியது.

இந்தக் கையேடு, இந்தியாவில் உள்ள முதியவர்கள் மத்தியில் ஏற்படும் காசநோயின் முழுமையான தாக்கத்தைப் புரிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் ஆய்வின் முக்கிய விவரங்களை சுருக்கமாக கூறுகிறது.

## முதியவர்கள் என்பவர் யார்?


உலக சுகாதார நிறுவனம் (WHO) 65 வயதுக்கு மேற்பட்டவர்களை முதியவர்கள் என்று அழைக்கிறது, ஆனால் இந்திய அரசின் கொள்கை ஆவணங்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை முதியவர்கள் என அழைக்கிறது.




## இந்தியாவில் முதியவர்கள் மத்தியில் காசநோய் (TB)

இந்தியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 104 மில்லியன் பேர் உள்ளனர், இது மொத்த மக்கள் தொகையில் 2011 கணக்கெடுப்பின் படி 8.6% சதவீதமாகும். இது 2026[1] க்குள் மொத்த மக்கள் தொகையில் 12.6% ஆக இருக்கும் என்று கணிக்கப்படுகிறது. தேசிய காசநோய் பரவல் ஆய்வு - 2019-21 படி, 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் காசநோய் பரவல் 588 எனக் கூறுகிறது, இது மொத்த தேசிய அளவிலான 316.[2]ஐ விட அதிகமாக உள்ளது. இந்திய காசநோய் அறிக்கை – 2023 படி, 2022ல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களில் 23.6% பேர் 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனக் கூறுகிறது.[3]


### 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்




**ஆதாரம்:** மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011




*2026 க்கான திட்டம்




**ஆதாரம்:** தேசிய காசநோய் பரவல் கணக்கெடுப்பு, 2019-21




**ஆதாரம்:** இந்தியா காசநோய் அறிக்கை 2023

[1] இந்திய அரசு. 2016. இந்தியாவில் முதியோர். புதுடெல்லி: மத்திய புள்ளியியல் அலுவலகம், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், இந்திய அரசு.

[2] இந்தியாவில் தேசிய காசநோய் பரவல் கணக்கெடுப்பு (2019-2021). ஆன்லைனில் கிடைக்கிறது: *https://tbcindia.gov.in/showfile.php?lid=3659* (24 ஆகஸ்ட் 2022 அன்று பெறப்பட்டது)

[3] இந்திய காசநோய் அறிக்கை 2023. ஆன்லைனில் கிடைக்கிறது: *https://tbcindia.gov.in/showfile.php?lid=3680* (31 மார்ச் 2023 அன்று பெறப்பட்டது)

## முதியவர்கள் ஏன் காசநோய் பாதிப்பிற்கு ஆளாகிறார்கள்?

**ஆபத்து காரணிகள்**
முதியவர்களை காசநோய் எளிதாக தாக்கக்கூடும் மற்றும் இளைஞர்களுடன் ஒப்பிடும்போது, அவர்களுக்கு காசநோய் சிகிச்சைக்கான பலன் குறைவாகவே இருக்கிறது.

**நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சையைத் தொடங்குவதில் தாமதம்**
எடை குறைதல், தொடர் இருமல், சோர்வு, மற்றும் பசியின்மை போன்ற காசநோயின் அறிகுறிகள் “பிற நோய்கள்” அல்லது “வயது மூப்பின் அறிகுறிகள்” என்று தவறாகக் கருதப்படுகின்றன.

**சிகிச்சை நிறைவு மற்றும் முடிவுகள்**
முதியவர்களுக்கு காசநோய் மருந்துகளின் பக்கவிளைவுகள் (ADRs) அதிகமாகவும் மற்றும் கடுமையாகவும் இருக்கும். மேலும், அவர்கள் பல்வேறு இணை நோய்களால் அதிக அளவு மாத்திரைகள் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதனால் காசநோய் சிகிச்சையை வெற்றிகரமாக முடிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கிறது.

**முதுமையில் பாலினம் மற்றும் காசநோய்**
தற்போதைய தரவுகளின் அடிப்படையில், வயதான பெண்களை விட ஆண்களில் தான் காசநோயின் பரவல் அதிகமாக உள்ளது. ஆனால், சமுதாயத்தின் பாலின நெறிமுறைகள் மற்றும் பாகுபாடு காரணமாக வயதான பெண்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.



## முதியவர்களுக்கு காசநோயால் ஏற்படும் சவால்கள்

**உடல் ரீதியான பாதிப்புகள்**

**சளி மாதிரிகளை சேகரிப்பதற்கு பல இடங்களுக்கு செல்ல வேண்டி உள்ளது:** காசநோயின் அறிகுறிகள் உள்ள முதியோர்கள் சளி மாதிரி சேகரிப்புக்காகப் பல பரிசோதனை மையங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதால், நோய் கண்டறியும் சுகாதார நிலையங்களை அணுகுவது அவர்களுக்கு மிகவும் சவாலாக இருக்கிறது.

**உதவியாளர்கள் மற்றும் சிறப்பு போக்குவரத்து தேவைகள்:** முதியவர்களுக்கு தாம் கீழே விழுந்துவிடுவோமோ என்ற பயம் மற்றும் உடல் பலவீனம் காரணமாக உதவியாளர் இல்லாமல் சுகாதார நிலையங்களுக்கு செல்ல முடிவதில்லை. இது நோய் கண்டறிவதை தாமதப்படுத்துகிறது.

**சுகாதார நிலையங்களுக்கு செல்வதில் உள்ள சிரமம்:** பெரும்பாலும், சுகாதார நிலையங்களில் உள்ள சிக்கல்கள் (நிறைய படிக்கட்டுகள், நெரிசலான காத்திருப்புப் பகுதிகள் மற்றும் தெளிவற்ற பெயர்ப்பலகைகள்) காசநோயால் பாதிக்கப்பட்ட முதியவர்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்துகிறது.

**வேலை இழப்பு மற்றும் ஊதியம்:** அவர்களது உடல் பலவீனம் வேலை செய்ய இயலாமைக்கு வழிவகுக்கும், இதனால் பொருளாதார சரிவு அல்லது வருமான இழப்பு ஏற்படும். சமூக தொடர்புகள் பாதிக்கப்படும், மற்றும் சுய பாதுகாப்புக்கான நோக்கம் மற்றும் ஊக்கம் குறைவாக இருக்கும்.

### சமூக பொருளாதார பாதிப்புகள்

**பொருளாதாரத்திற்காக சார்ந்திருத்தல்:** முதியவர்கள் பொருளாதாரத்திற்காக குடும்ப உறுப்பினர்களைச் சார்ந்து இருக்கக்கூடும். இது அவர்கள் மருத்துவ சேவைகளை பெறுவதை வெகுவாக பாதிக்கிறது

**ஆரோக்கியமான உணவு கிடைப்பதில் சிக்கல்கள்:** காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து அதிகம் தேவைப்படுகிறது, ஏனெனில் சிகிச்சையை தவறாமல் பின்பற்றுதல் மற்றும் சிகிச்சை முடிவுகளுக்கு ஊட்டச்சத்து ஒரு முக்கிய பங்களிக்கிறது.

முதியவர்கள் ஊட்டச்சத்து நிறைந்த உணவை உட்கொள்வதில் சவால்களை எதிர்கொள்ளும் வாய்ப்பு அதிகம் உள்ளது. காசநோயால் பாதிக்கப்பட்ட வயதான ஆண்களை விட பெண்களுக்கு பாதிப்புகள் அதிகம் உள்ளது.

**பொருளாதார நலத்திட்டங்களை பெறுவதில் சிக்கல்கள்:** மத்திய அரசின் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மாநில அரசின் ஓய்வூதியத் திட்டங்களும் உள்ளன. ஆனால் காசநோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு இந்தத் திட்டங்களை பெறுவது கடினமாக உள்ளது.

### உளவியல் மற்றும் சமூக காரணிகள்

**பொருளாதார சார்பு:** பொருளாதார சார்பு காரணமாக, முதியவர்கள் பெரும்பாலும் தங்கள் குடும்பங்களில் இருந்து புறக்கணிப்பு மற்றும் தனிமைப்படுத்தப்படுத்தப்படுகிறார்கள், இது மோசமான உடல்நல பேணுதலுக்கு வழிவகுக்கிறது.

**காசநோய் பற்றிய குறைந்த தகவல்:** முதியவர்கள் சமூக ஊடகங்கள், இணையதளம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுகாதாரத் தகவல்களை ஆன்லைனில் கண்டறிவதற்கான வாய்ப்புகள் குறைவு.

**மனநல பிரச்சினைகள்:** குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பயனற்றது போன்ற உணர்வு, வேலையுடன் தொடர்பில்லாத உணர்வு, தனிமை, பிறரை சார்ந்து இருத்தல், தாழ்வு மனப்பான்மை, காசநோய் பற்றிய பயம் மற்றும் சுய களங்கம் அல்லது ஒதுக்குதல் போன்ற உணர்வு, புகையிலை, மது மற்றும் பிற பொருட்களை அதிகமாகப் பயன்படுத்துதல் (பெரும்பாலும் ஆண்கள்) ஆகியவை முதியவர்கள் சந்திக்கும் மனநல பிரச்சினைகளாகும்.

> **அறிகுறிகளை புறக்கணிப்பது**
>
> **முதியவர்கள் பெரும்பாலும் காசநோய்க்கான அறிகுறிகளை புறக்கணிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.**

## மேம்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பராமரிப்பிற்கான முக்கிய பரிந்துரைகள்

### 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் காசநோய் பரிசோதனை மற்றும் காசநோய் பாதித்தவர்களை தீவிர களப்பணி மூலம் கண்டறிதல்

- சமுதாயம் மற்றும் சுகாதார நிலையங்களில் பரிசோதனை முறையை நடைமுறைப் படுத்துவதற்கான வழிகாட்டுதலை (SOPs) உருவாக்குதல்
- முதியவர்களின் பரிசோதனை மற்றும் கண்காணிப்பை சமுதாய அடிப்படையில் வலுவடைய செய்தல்
- பரிசோதனை முடிவுகளை ஒருங்கிணைக்கவும் ஒப்பிடவும் டாஷ்போர்டு (dashboard) உருவாக்குதல்

### வயதானவர்களின் நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கு தேவையான புதிய வழிகாட்டுதல்களுக்கு

- பொதுவான அறிகுறிகளைக் கண்டறிய நெறிமுறைகளை உருவாக்குதல் (உதாரணமாக, சளி மாதிரிகளை எடுப்பதற்கான நெறிமுறைகள்)
- இணை நோய்கள் மற்றும் மருந்துகளின் சரியான அளவுகளை முறையாக மதிப்பீடு (அ) ஆய்வு செய்வதற்கான் வழிகாட்டுதல்களை ஏற்படுத்துதல்
- நோய் அபாயம் மற்றும் எதிர் விளைவுகளை கணிப்பதற்கான எளிய கண்காணிப்பு முறையை அமைத்தல்

### தேசிய சுகாதார இயக்கம் (NHM) மற்றும் தேசிய தொற்று அல்லாத நோய்கள் (NCD) திட்டங்கள் இடையேயான இணைப்பு

- நீரிழிவு நோய் மற்றும் காசநோய்க்கான பரிசோதனை நெறிமுறைகளை பின்பற்றுதல்
- முதியவர்களுக்கான காசநோய் மற்றும் இதய ஆரோக்கிய பரிசோதனை நெறிமுறைகளை உருவாக்கி பெரிய அளவில் செயல்படுத்துதல்
- 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இணை நோய்களைப் பதிவு செய்ய Ni-kshay app பயன்படுத்துதல்
- நலவாழ்வு மையங்களுக்கு (HWCs) வருகை தரும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் காசநோய் பரிசோதனையை மேற்கொள்ள, நலவாழ்வு மையங்களின் (HWCs) சமூக சுகாதார அதிகாரிகளுக்கு (CHOs) பயிற்சி அளித்தல்

## முக்கிய பரிந்துரைகள்

### தேசிய முதியோர் சுகாதார திட்டத்துடன் (NPHCE) இணைக்க

- நலவாழ்வு மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமூக சுகாதார மையங்களில் NPHCE கொள்கையை செயல்படுத்துதல்
- முதியோருக்கான முழுமையான பராமரிப்பு அமைப்புகளை (models) உருவாக்கி, அவர்களுக்கு மேலும் சமூக ஆதரவை வழங்க நெறிமுறைகளை உருவாக்குதல்

### மேம்பட்ட சமூக ஆதரவளிக்க

- ஓய்வூதியத் திட்டங்கள், போக்குவரத்துக் சலுகைகள் (அல்லது இலவச போக்குவரத்து), ஊட்டச்சத்து ஆதரவு மற்றும் Ni-kshay மித்ராவில் முதியவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் போன்ற செயல் திட்டங்கள் மூலம் காசநோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு உதவுதல்.
- முதியவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கான எளிய நெறிமுறைகளை உருவாக்குதல்.
- தொழில்முறை பயிற்சி மற்றும் இல்லம் சார்ந்த தொழில்களில் முதியவர்கள் ஈடுபட தொடர்புகளை உருவாக்குதல்

### முதியவர்கள் மத்தியில் காசநோய் பற்றிய ஆராய்ச்சிக்கான பரிந்துரைகள்

- முதியவர்கள் அதிகப்படியாக வாழும் பகுதிகளை கண்டறிந்து, அங்கு உள்ள பிரச்சனைகளை ஆவணமாக்குதல்.
- மாநில அளவில் நோயின் தாககத்தை பற்றிய விவரங்களை தெளிவுபடுத்துதல்
- முதியவர்களிடையே சாதகமற்ற விளைவுகளை ஏற்படுத்தும் காரணிகளான போதைப்பொருள் பயன்பாடு, சிகிச்சையில் பாலினத்தின் தாக்கம் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களிடையே சிகிச்சை நிறைவு விகிதம் போன்றவற்றை முன்னரே கண்டறிந்தல்

## காசநோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களை எவ்வாறு ஆதரிக்கலாம்?

முதியவர்களுக்கு காசநோய் பராமரிப்பை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்

நலவாழ்வு மையங்கள் (HWCs), முதியோர் இல்லங்கள் மற்றும் சமூகம் அடிப்படையிலான அமைப்புகளில், முதியவர்களை மையமாகக் கொண்டு ஒரு வலுவான கண்காணிப்பு முறையை உறுதி செய்தல்

மருந்துகளை அவர்களது வீடுகளுக்கு விநியோகம் செய்வதன் மூலம் அவற்றைப் எளிதாக பெறுவதற்கு வசதி செய்தல்

காசநோயால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு, உளவியல் மற்றும் உணர்வு பூர்வமான ஆதரவை அவர்கள் வீட்டிற்குச் சென்று வழங்குதல்

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, நலவாழ்வு மையங்களில் (HWCs) காசநோய் பரிசோதனை மற்றும் சளி மாதிரி சேகரிப்பை மேற்கொள்ள, சமூக சுகாதார அதிகாரிகளுக்கு (CHOs) பயிற்சி அளித்தல்.

Ni-kshay தளத்தில் முதியவர்களின் இணை நோய்களுக்கான தகவல்களை முறையாக பதிவு செய்து, பரிந்துரை செய்தல்.

ஓய்வூதியத் திட்டங்கள், போக்குவரத்துக் சலுகைகள் (அல்லது இலவச போக்குவரத்து), துணை ஊட்டச்சத்து ஆதரவு மற்றும் Ni-kshay மித்ராக்களில் முதியவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் போன்ற உதவிகளை வழங்குதல்.

தொழில்முறை பயிற்சி மற்றும் / அல்லது இல்லம் சார்ந்த தொழில்களில் வாய்ப்புகளை உருவாக்குதல்

**சுகாதார நிலையங்கள் மற்றும் சமூக அளவில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் காசநோயால் பாதிக்கப்பட்ட முதியவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதில் பெரிதளவு உதவும். இது காசநோய் திட்டங்கள் மற்றும் முதியவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் அவர்களின் வயதிற்கு ஏற்ற சுகாதார அமைப்புகளை உருவாக்கவும் உதவும்.**

25 REACH Equitable Health for All

**Resource Group for Education and Advocacy for Community Health (REACH)**
No. 194, 1st Floor, Avvai Shanmugam Salai Lane,
Lloyds Road, Royapettah, Chennai – 600014
Phone: 044-45565445 / 28132099

**Email**: support@reachindia.org.in
**Media Related Queries**: media@reachindia.org.in

www.reachindia.org.in @Speaktb @SPEAKTB @REACHSpeakTB

இந்த அறிக்கையில் இடம்பெறும் அனைத்து புகைப்படங்களும் டிபி சாம்பியன்கள் மற்றும்/அல்லது காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் முழு ஒப்புதலுடன் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த ஆவணம் சர்வதேச வளர்ச்சிக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி (USAID) மூலம் அமெரிக்க மக்களின் ஆதரவால் சாத்தியமானது.
இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்கள் REACH இன் முழுப் பொறுப்பாகும், USAID அல்லது அமெரிக்க அரசாங்கத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.